ஓம் சரவணஜோதியே நமோ நம

# ஆறுமுக அரங்கமகானின் குருவார அருளாசி நூல்

19.03.2026

1. சங்கடம் போக்கிடும் சண்முகநாதா
சர்வபலம் தரும் சற்குருநாதா
ஓங்காரக்குடிலில் சரவண ஜோதியாக
உயர் ஞானம் தரும் ஞானபண்டிதா

2. ஞானபண்டிதா உமை போற்றியே
ஞானதேசிகனும் அருளாசி தன்னை
ஞானம்பட விசுவாவசு சேல் திங்கள்
நல் முதல் குருவார அருளாசியாக உரைப்பேன்

3. உரைக்கவே பிரணவக் குடில் நோக்கி
உலகோர் வந்து வணங்கி
குறைகள் தன் வினைகள் விலக
குமரா குருவாய் அருள்வாய் என வேண்ட

4. வேண்டவே உங்களின் எண்ணப்படி
வேலவனுடன் அரங்கன் யானும்
உண்டான தடைமுடைகள் நீக்கி
உடன் வந்து அருள் செய்வேன்

5. செய்வேன் ஆயுள் ஆரோக்கியமென
சிறப்பான வழிகாட்டல் தந்து
அய்யமற அரங்கன் எந்தனின்
ஆற்றல்மிக்க சன்மார்க்க வழிதனை

6. வழிதனை என்றும் அகலா வண்ணம்
வழிமொழிந்து தொடர அருள்வேன்
அழியாமை தரும் ஜீவ தயவெனும்
அன்னதான வழிகள்தனை ஏற்று

7. ஏற்றுமே என் பீடம்தனில் நடக்கின்ற
இயம்பிடுவேன் அன்னதான சேவையில்
உற்றதொரு பொருளுதவி செய்துமே
உயர்வான அருளமுதை உண்டு

8. உண்டுமே சைவநெறி போற்றும்
உயர் தொண்டர் பெருமக்களாய்
தொண்டு வழி கலந்து இணைந்து
தொடர்ந்து ஞானிகள் மேலான பூஜை

9. பூசைதனை செய்து வருகவே
புண்ணிய பலமும் கூட்டி வருகவே
நேசக்கரம் நீட்டி ஞானியர்கள்
நிழலாய் உங்களுடன் தொடர்ந்து

10. தொடர்ந்து வந்து துணைபுரிவர்
தொடருகின்ற தரும பலத்தாலே
இடர்களை எல்லாம் நீக்கி
இன்பமான ஞானவாழ்வு தந்தருள்வர்

11. அருள்மிக்க ஞானியர் படைகளுள்
ஆவீரே நீங்களும் ஞானிகளாக
வரம்பெற வாரீர் என்பீடம் நோக்கி
வழங்கிய அரங்கனென் குருவார அருளாசி முற்றே.

—சுபம்—

ஓம் முருகப்பெருமான் திருவடிகள் போற்றி போற்றி